


**09. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய பகுதிகளில் நிலவும் பதற்றத்தை தணிக்க பேச்சுவார்த்தைகளும், தூதரக நடவடிக்கைகளும் அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 3 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

3. இளையோர் பயன்பெறும் வகையில் வலுவான ஆராய்ச்சி சூழல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவுறுத்தியுள்ளார்.

4. திமுகவின் மாநில மாநாடு கட்சி தலைவரும், முதலமைச்சருமான திரு. மு. க. ஸ்டாலின் தலைமையில் இன்றுமாலை திருச்சி சிறுகனூரில் நடைபெறுகிறது.

5. உலக கோப்பை தகுதி சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

ஜெய்சங்கர்

மேற்காசிய பகுதிகளில் நிலவும் பதற்றத்தை தணிக்க பேச்சுவார்த்தைகளும், தூதரக நடவடிக்கைகளும் அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மேற்காசிய நிலைமை குறித்து மக்களவையில் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அமைச்சர், அனைத்து பகுதிகளிலும், அமைதியை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய அரசு கடந்த 20ஆம் தேதி அறிக்கை வெளியிட்டதை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி நிலமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்தந்த அமைச்சகங்கள் ஒருங்கிணைந்து செயலாற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்காசிய பகுதிகளில் நிலவும் பதற்றத்தால் இந்தியாவும், பாதிக்கப்பட்டிருப்பதாக எடுத்துரைத்த அவர், கோடிக்கணக்கான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் வசிப்பதாகவும், ஈரானில் பலர் கல்வி மற்றும் பல வேலைகளில் பணியாற்றி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நம் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, எண்ணெய், எரிவாயு விநியோகத்திற்கான முக்கிய பிராந்தியமாக மேற்காசியா திகழ்கிறது என்றும் அமைச்சர் கூறினார்.

இதுவரை 67 ஆயிரம் இந்தியர்கள் அப்பகுதிகளிலிருந்து நாடு திரும்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையிலும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இத்தகைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

*************

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ம் கட்ட அமர்வு இன்று தொடங்கிய நிலையில் மேற்காசிய நிலைமை தொடர்பான பிரச்சனையில் அமளி நிலவியதால் மக்களவை பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று நண்பகல் கூடியபோது மேற்காசிய பிரச்சனை குறித்து வெளியுறவு அமைச்சர் தாமாக முன்வந்து அறிக்கை தாக்கல் செய்தார்.

காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி கட்சிகளை சேர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள் பதாகைகளுடன் அவையின் மைய பகுதியில் வந்து குரல் எழுப்பினார்கள்.

அப்போது குறுக்கிட்ட அவை நடத்தும் அலுவலர் திரு. ஜெகதாம்பிகா பால் அவையின் விதிகளை மீறி செயல்பட வேண்டாம் என்று உறுப்பினர்களை கேட்டுக்கொண்டார்.

எதிர்கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கைகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ இத்தகைய பொறுப்பற்ற எதிர்கட்சிகளை வாழ்நாளில் தாம் பார்த்ததே இல்லை என்று குறிப்பிட்டார்.

மக்களவை தலைவருக்கு எதிராக எதிர்கட்சிகளின் நம்பிக்கையில்லா தீர்மானம் இன்றைய அலுவல் பட்டியலில்

இடம்பெற்றுள்ளதாக எடுத்துரைத்த அவர், ஆனால் எதிர்கட்சிகள் குழப்பமடைந்து பிற பிரச்சனைகளை விவாதிக்க இன்று கோரிக்கை விடுப்பதாக குறிப்பிட்டார்.

எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவை பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக இன்று காலை மக்களவை கூடியவுடன், மறைந்த உறுப்பினர் மற்றும் முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

*************

நட்டா

மேற்காசியாவில் நெருக்கடி தொடர்பாக டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அறிக்கை தாக்கல் செய்தபோது, எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டது குறித்து மாநிலங்களவை முன்னவர் திரு.ஜே.பி.நட்டா அதிருப்தி தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகளுக்கு விவாதத்தில் எவ்வித அக்கறை இல்லை என்று குறை கூறிய அவர், அமளியிலும், கூச்சல் குழப்பங்களிலும் ஈடுபடுவதில் தான் அவர்கள் கவனம் செலுத்துவதாக குற்றம் சாட்டினார்.

முன்னதாக மாநிலங்களவையில் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு சவால்கள் குறித்த விவாதத்தில் பேசிய எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மேற்காசிய குழப்பங்கள், நாட்டின் பொருளாதார ஸ்திரதன்மையை

பாதிப்பதோடு, அப்பகுதிகளில் வாழும் இந்திய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்று குறிப்பிட்டார்.

*************

ராம் மோகன் நாயுடு

மேற்காசியா நிலமையை அடுத்து பாதுகாப்பான விமான போக்குவரத்துகளை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது பேசிய அவர், விமானங்களை இயக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு உத்தரவாதம் இருந்தால் மட்டுமே அவற்றை இயக்க சுற்றறிக்கைகளை விமான ஆணையரகம் பிறப்பித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதுவரை 90 ஆயிரம் பயணிகள் இந்தியா மேற்காசிய பகுதிகள் இடையே கடந்த ஒருவாரத்தில் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

*************

பிரதமர் - இணையவழி கருத்தரங்கு

தொழிற்சாலைகளுடன் இணைந்து ஆராய்ச்சியுடன் கூடிய கற்றலை கல்விநிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தலைப்பில் பட்ஜெட்டிற்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் இன்று உரையாற்றிய பிரதமர், நவீன கண்டுபிடிப்புகளுடன் நம் பொருளாதாரம் முன்னேறி வரும் நிலையில் இதற்கான அவசியத்தை வலியுறுத்தினார்.

எதிர்கால நவீன தொழில்நுட்பங்களில் மகளிருக்கு சம வாய்ப்புகள் வழங்கப்படுவதை மத்திய அரசு உறுதி செய்வதாக கூறியுள்ள பிரதமர், அறிவியல், தொழிநுட்பம், பொறியியல், கணித துறைகளில் மகளிரின் பங்களிப்பு அதிகரித்து வருவது குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

இளையோருக்கு தூண்டுகோலாக திகழும் வலுவான ஆராய்ச்சி சூழல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கல்வி, வேலை-வாய்ப்பு, தொழில் நிறுவனங்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தும் வகையில் அனிமேஷன், ஒலி ஒளி தொழில்நுட்பங்கள் முன்னெடுத்துச்செல்லப்பட வேண்டும் என்றார்.

நாட்டின் சுகாதார கட்டமைப்பு கடந்த சில ஆண்டுகளாக வலுவடைந்து வருவதாக கூறிய பிரதமர், பல மாவட்டங்களில் மருத்துவகல்லூரிகள் தொடங்கப்பட்டு, முழுமையான ஆரோக்கிய பாதையில் நம் தேசம் பயணிப்பதாக குறிப்பிட்டார்.

அனைத்து மாவட்டங்களுக்கும் சுகாதார சேவைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்த அவர், உலக அளவில் நம் பாரம்பரிய சிகிச்சை முறைகளான

யோகாவும், ஆயுர்வேதமும் பிரபலமடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மருத்துவ துறையில், முதியோர்கள், நோயாளிகள் உள்ளிட்டோரை பராமரிப்பதற்கான தேவைகள் அதிகரித்து வரும் நிலையில் லட்சக்கணக்கான இளையோருக்கு இப்பிரிவில் திறன் மேம்பாட்டு வேலை வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும் எடுத்துரைத்தார்.

*************

யுவ பாரத்

வளர்ச்சி அடைந்த இந்தியாவில் இளையோரின் பங்களிப்பு திட்டத்தின் 2ஆவது கட்டத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் டெல்லியில் இன்று தொடங்கியுள்ளது.

நாட்டை பல்வேறு துறைகளில் வலுப்படுத்துவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளும் வகையில் 35 கல்லூரிகளை சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் இதில் பங்கேற்கின்றனர்.

நாட்டின் வளர்ச்சி பாதையில் இணைந்து தேச கட்டமைப்பில் செயலாற்றும் வகையில் கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள் உள்ளிட்டவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

*************

திமுக மாநாடு

திருச்சி சிறுகனூரில் திமுகவின் மாநில மாநாடு இன்று நடைபெறுகிறது.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக முதலமைச்சர் திருச்சி வந்தடைந்தார்.

இந்த மாநாட்டை ஒட்டி திருச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

*************

உதய நிதி

சென்னை சேப்பாக்கம் திருவல்லிகேணி, துறைமுகம், ராயபுரம் வில்லிவாக்கம் பகுதிகளில் 21 கோடியே 72 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

*************

அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் பள்ளிவாசல்களில் பணியாற்றும் உலமாக்கள் இருசக்கர வாகனத்திற்கான மானியம் பெற வரும் 13ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*************

வேலை வாய்ப்பு

திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையத்தில், ரயில்வே பணிக்கான குரூப் D தேர்வு பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளதால் இந்த வாய்ப்பை தேர்வர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக துணை இயக்குனர் திருமதி பிரபாவதி கேட்டுக்கொண்டுள்ளார்.

வாய்ஸ்

*************

இருவரி

விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தேசிய தொழில் பழகுனர் பயிற்சி சேர்க்கை முகாம் இன்று நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் மத்திய அரசின் நலத்திட்ட 3 நாள் சேவை முகாம் இன்று தொடங்கியது.

உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெறும் முகாமில் ஆதார் திருத்தங்கள், வங்கி சேவைகள், மானிய திட்டங்கள் உள்ளிட்டவைகளுக்கான பதிவு மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அருகே கொத்தடிமை தொழிலில் ஈடுபட்டிருந்த 9 சிறார்கள் உட்பட 24 பேரை மாவட்ட நிர்வாகம் மீட்டுள்ளது.

இதுதொடர்பாக மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டம் கூடலூரை அடுத்த சோலை காரக்குன்னு பகுதியில் காட்டு யானை தாக்கி இரண்டு பேர் உயிரிழந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் வனத்துறையினருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே மானை வேட்டையாடிய இருவர் கைது செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

*************

ஹாக்கி

உலக கோப்பை தகுதி சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது